**கூடலூர் நகராட்சி(நீலகிரி)**
**29 .11.2018 ம் தேதி வியாழக் கிழமை காலை 11.00 மணிக்கு நடைபெற்ற இந்நகராட்சியின்**
**நகர்மன்ற சாதாரண கூட்டத்தின் பொருட்கள்**
**தலைமை– திருமதி.பார்வதி.எம்.ஏ.,**
**தனி அலுவலர் மற்றும் ஆணையாளர்**

1)

| வ.எண். | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை(ரூ இலட்சத்தில்) | தலைமை பொறியாளர் தொழில் நுட்ப அனுமதி எண்: |
|---|---|---|---|
| 1. | இந்நகராட்சிக்கு கூடுதல் அலுவலகம் கட்டிடம் கட்டுதல். | **150.00** | **262/2016-2017** |

மேற்கண்ட பணிக்கு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறை கடித ந.க.எண். 25306–12/2016/பி2 நாள் 24.11.2016 ன்படி உட்கட்டமைப்பு இடைவெளி நிரப்புதல் திட்டத்தின் கீழ் கூடுதல் நகராட்சி அலுவலகம் கட்டிடம் கட்டுவதற்கு ரூ.150.00 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு தலைமை பொறியாளர் , சென்னை அவர்களின் தொழில் நுட்ப அனுமதி எண் Roc No.1041/2016/DO1 நாள் 03.03.2017 ன்படி தொழில் நுட்ப அனுமதி வழங்கப்பட்டு அதில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளின்படி நகர ஊரமைப்பு இயக்கம் அவர்களிடமிருந்து அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோர தெரிவித்துள்ளதால் கட்டிட அனுமதி பெற 28.09.2016 அன்று கடிதம் அனுப்பப்பட்டதில் 07.10.2016 அன்று வரப்பெற்ற check list - படி ஆவணங்கள் சமர்பிக்குமாறு தெரிரிவிக்கப்பட்டுள்ளது. கட்டிட அனுமதிக்கு தடையில்லா சான்றிதழ்கள் பெற வேளாண்மை பொறியியல் துறை, புவி தொழில் நுட்ப மையம், குன்னூர் மற்றும் மாவட்ட வனதுறை, கூடலூர் அவர்களுக்கு 20.10.2016 அன்று கடிதம் அனுப்பட்டதில் வேளாண்மை பொறியியல் துறையினரால் இடத்தை ஆய்வு செய்து 28.12.2016 அன்று தடையில்லா சான்றிதழ் வழங்கப்பட்டது. புவியியல் தொழில் நுட்ப மையம் அவர்கள் இடத்தை ஆய்வு செய்து 28.01.2017 அன்று தடையில்லா சான்றிதழ் பெறப்பட்டது.

மாவட்ட வனதுறை அலுவலர் கூடலூர் அவர்களிடமிருந்து வரப்பெற்ற கடிதத்தில் தடையில்லா சான்றிதழ் பெற வன பாதுகாப்பு துறை அலுவலர், கோவை மாவட்டம் அவர்கள் மூலம் 07.08.2017 அன்று முதன்மை தலைமை வன பாதுகாவலர் (துறை தலைவர்) சென்னை அவர்களுக்கு பரிந்துறை செய்து அனுப்பப்பட்டது. வன துறையிடமிருந்து தடையில்லா சான்றிதழ் பெற கால தாமதம் ஏற்பட்டு 11.05.2018 அன்று நேரடியாக சென்று தடையில்லா சான்றிதழ் பெறப்பட்டது.

மேற்படி கட்டிட அனுமதி பெற வரைபடம் மற்றும் தடையில்லா சான்றிதழ் நகர ஊரமைப்பு துறை இயக்குனர், கோவை அவர்களுக்கு சமர்ப்பிக்கப்பட்டதில் வேளாண்மை பொறியியல் துறையின் தலைமை பொறியாளர், சென்னை அவர்களிடமிருந்து அறிக்கை பெற வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளதால் 28.08.2018 அன்று செயற்பொறியாளர், வேளாண்மை பொறியியல், உதகமண்டலம் அவர்களுக்கு கடிதம் வைக்கப்பட்டு 29.11.2018 அன்று இடத்தை ஆய்வு செய்யப்பபட்டது. அதற்கான அறிக்கை பெறப்பட்டவுடன் AAA குழவின் இசைவு பெறப்பட்டு HACA இசைவு பெற கூட்டத்திற்கு பொருள் வைத்து கட்டிட அனுமதி பெறப்படும் நிலையில் உள்ளதால் மதிப்பீட்டினை 2018 -2019 ஆம் ஆண்டின் தரப்படுத்தப்பட்ட விலை விவர பட்டியல் படியும், சரக்கு மற்றும் சேவை வரிக்குட்பட்டு திருத்தி அமைப்பதற்கு தலைமை பொறியாளரிடமிருந்து அனுமதி பெற்று பணியினை மேற்கொள்ள அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு– 1)** மன்றம் அனுமதி வழங்கலாம்

2) தலைமை பொறியாளரிடமிருந்து தொழில்நுட்ப அனுமதி பெற்று திருத்திய மதிப்பீட்டின் மூலம் பணியினை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

2) முதியோர் உதவித் தொகை, விதவை உதவி தொகை, முதிர்கன்னி மாற்று திறனாளி மற்றும் DDWP உதவி தொகை பெறுவதற்கு வறுமை கோட்டிற்கு கீழ் சான்றிதழ் வழங்க கோரி வட்டாட்சியர் அலுவலகத்திலிருந்து கடிதங்கள் வரப்பெற்றதின் அடிப்படையில் 8 நபர்களுக்கு மேற்படி பென்சன் பெறுவதற்காக மட்டும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| 1) | திரு.சித்தராஜ், த/பெ.பெட்டையன், கள்ளிக்கோட்டை சாலை, டி.கே.பேட், கூடலூர் | – | முதியோர் |
| 2) | திரு.ஆறுமுகம், த/பெ.வேலாயுதம், 12/991B1 புறமனவயல், கூடலூர் | – | முதியோர் |
| 3) | திருமதி.லட்சுமி, க/பெ.தாசன்(L), 2/108, ஒ.வி.எச் சாலை, மேல்கூடலூர் | – | முதியோர் |
| 4) | திருமதி.நூர்ஜகான்,க/பெ.சாகுல் ஹமிது, 20/120, குசுமகிரி, கூடலூர் | – | கைவிடப்பட்டோர் |
| 5) | திருமதி.புஷ்பவதி, க/பெ.முத்துராஜ், 8/65, டாக்டர் காலனி, கூடலூர் | – | முதியோர் |
| 6) | திருமதி.பாப்பாய், க/பெ.கருப்பையா, 7/43, கோழிப்பாலம், கூடலூர் | – | |
| 7) | திருமதி.கந்திமதி, க/பெ.சுப்பிரமணி(L),10/72A, வண்டிபேட்டை, கூடலூர் | – | முதியோர் |
| 8) | திருமதி.சாவித்திரி, க/பெ.சுகுமாரன், 6/111, RG புரம், கூடலூர் | – | முதியோர் |

**அலுவலக குறிப்பு –** அனுமதி வழங்கலாம்

3) இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவிற்கு தேவையான கீழ்கண்ட தளவாடப் பொருட்கள் வாங்கவும் அதற்கான செலவினம் ரூ.200000/– ற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண். | பொருட்கள் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | சீமாறு பிடியுடன் | 100 |
| 2 | தென்னத் துடைப்பம் | 400 |
| 3 | பிளாஸ்டிக் கூடை | 100 |
| 4 | கொத்து 2 பல் | 50 |
| 5 | மண்வெட்டி பிடியுடன் | 40 |
| 6 | கடப்பாறை | 10 |
| 7 | பிக்காஸ் | 5 |
| 8 | சம்மட்டி பிடியுடன் | 5 |
| 9 | கத்தி | 50 |
| 10 | சவுஸ் | 10 |
| 11 | இஸ்முள் | 4 |
| 12 | கொத்து முள் 3 முள் | 5 |

**அலுவலக குறிப்பு –** அனுமதி வழங்கலாம்

4) இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் குப்பைகளை மக்கும் குப்பை மக்காத குப்பை தரம் பிரித் வழங்க பொது மக்களுக்கு அறிவுறுத்தப்பட்டு தற்போது பொதுமக்கள் அவ்வாறே வழங்கி வருகிறார்க தற்போது அதிகமான வீடுகள் உள்ள பகுதியில் குப்பை வீட்டு கழிவுகளை உரமாக்கும் திட்ட அமுல்படுத்த வேண்டியுள்ளதால் இப்பகுதிகளில் (Sintex) நிறுவ வேண்டியிருப்பதால் 500 லிட் பெறக்கூடிய (Sintex) எண்ணிக்கை 12 புதியதாக விநியோகம் செய்ய ரூ.50000/— ற்கு மன்றத்தின் அனும வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு —** அனுமதி வழங்கலாம்

5) இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு குப்பை உரகிடங்கு மற்றும் கொசு மருந்து தெளிக்க பயன்படுத்தப்படும் கொசு மருந்து தெளிப்பான் ஸ்ப்ரே (Spray) இயந்திரம் புதியதாக எண்ணிக்கை வினியோகம் செய்ய தோராய செலவினம் ரூ.20000/— ற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு —** அனுமதி வழங்கலாம்

6) இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு உரக் கிடங்கில் திடக்கழிவு மேலாண்மை குறித்து தரம் பிரித் பயன்படுத்தும் முறைகளை புகைப்படங்கள் எடுத்து நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை மற் மாவட்ட ஆட்சித் தலைவர் உதகமண்டலம் (Green Award) அவர்களுக்கு அனுப்ப வேண்டியுள்ளது திருவாளர்கள். பாக்கியா டிஜிட்டல் ஸ்டுடியோ அன்ட் வீடியோ கவரேஜ், கூடலூர் நிறுவனத்திற்கு ஜூ ஜூலை ஆகஸ்ட் மற்றும் செப்டம்பர் ஆகிய மாதத்திற்கான தொகை ரூ.10440/— னை வழங்க மன்றத்தி அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு —** அனுமதி வழங்கலாம்

7) இந்நகராட்சிக்கு சொந்தமான ஆணையாளர் பயன்பாட்டில் உள்ள TN 43 Z 4203 பொலீரோ வாகனத்திற்கு ஆயில் சர்வீஸ், ஆயில் பில்டர்,டீசல் பில்டர், டெங்கஷனர், கீர்பாக்ஸ் ஆயில், பிரேக்பேட்,பிரன்ட் சோக்காப்சர், பால்ஜாயின்ட்,லோவர் அன் புஷ் மற்றும் என்ட் செட் போன்ற பணிகளை சரி செய்ய விலைப்புள்ளி கோரியதில் கீழ்கண்ட நிறுவனங்களிடமிருந்து விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

| வ.எண் | பணியின் பெயர் | உள்ளூர் விலைப்புள்ளிதாரர் விபரம் | விலைப்புள்ளி தொகை |
|---|---|---|---|
| 1 | இந்நகராட்சிக்கு சொந்தமான ஆணையாளர் பயன்பாட்டில் உள்ள TN 43 Z 4203 பொலீரோ வாகனத்திற்கு ஆயில் சர்வீஸ், ஆயில் பில்டர்,டீசல் பில்டர், டெங்கஷனர், கீர்பாக்ஸ் ஆயில், பிரேக்பேட்,பிரன்ட் சோக்காப்சர், பால்ஜாயின்ட்,லோவர் அன் புஷ் மற்றும் என்ட் செட் பணிகள் செய்தல் | M/S R.K.மோட்டார்ஸ் கூடலூர் | Rs.9990/- |
| | | M/S பென்ஸ் ஆட்டோ கேரேஜ், கூடலூர் | Rs.10500/- |
| | | M/S பயனீர் ஆட்டோ கேரேஜ், கூடலூர் | Rs.10700/- |

வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் M/S R.K.மோட்டார்ஸ், கூடலூர் அவர்களின் விலைப்புள்ளி குறைவாக இருப்பதால் அதனை அனுமதிக்கலாம்.

**அலுவலக குறிப்பு—** அனுமதி வழங்கலாம்.

**ஆணையாளர்**
**கூடலூர் நகராட்சி(நீலகிரி)**